முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 560**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.04.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மமே தவமாக மகா சூட்சுமமாய்
தண்டாயுதன் என் சக்தியாக வந்தநல் அரங்கனே
பெருமைமிக்க கலியுகத்தின் ஞானகுருவே
பரமானந்தசதா சிவ சற்குருவே
2. சற்குருவே சங்கடம் போக்க வந்த ஆறுமுக அரங்கனே
சடாட்சரன் யான் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
அற்புதம்பட சார்வரி சேல் திங்களில்
ஆற்றல் அரங்கனுக்கு கூடிட உரைப்பேன்
3. உரைப்பேன் ஞானஅறிவுரை ஆசி
உயர்வாக அரங்கன் ஞானமே இந்த கலியுகத்தை
குறையில்லா ஞான பூமியாக்கி இனிதே
குவலயத்தில் பேர் அற்புதம் நடத்தும்
4. நடத்துமப்பா பாதுகாப்பு மிக்க நல்ல பூமியாக
ஞானமும் இயற்கை பலமும் மக்களின் மேன்மை சக்தியும்
இடரில்லாத செயல்பாடுகளும் பெருமாற்றமும்
இந்த கலியுகம் அரங்கன் உன் தர்மத்தால் காணக்கூடும்
5. கூடுமப்பா குறையில்லாத உன் தொண்டர்கள் மூலம்
குருராஜன் உன் தலைமைக் கொண்ட ஞான ஆட்சி
நாடெங்கிலும் புண்ணிய சக்தியாக மாறி
ஞானவான்கள் கொண்டு இனிதே ஆளப்படும்
6. ஆளுகின்ற அற்புதத்தை ஆறுமுகன் யான்
ஆக்கமுடன் இனிதே சக்தியூட்டி நடத்தி காப்பேன்
வாழுகின்ற மக்களுக்கு பாதுகாப்பும்
வாழும் காலமே ஆறுமுகன் என்னை அவர்கள் அறியும் உணரும் சூட்சுமமும்
7. சூட்சுமத்தை அரங்கன் உன்வழி நடத்துவேன்
சுப்ரமணியன் யானே இந்த உலகுக்கு உன்வழி
சூட்சுமம் பல தந்து இனிதே
சுத்தநெறி வெளிகண்ட மக்களாய் ஞானிகளாக மாற்றி உலகோரை பாதுகாப்பேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.